திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். நான் அதை மீண்டும் சொல்லுகிறேன். அங்கே ஒரு கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் அந்தத் தெற்குக் கோபுரம் கட்டுவதற்கு ஆணையர் அனுமதி அளித்தார். அதற்குத் தமிழக அரசும் பணம் கொடுத்தது. ஆந்திர அரசு மற்றும் கருநாடக அரசிடமிருந்தும் பணம் வந்தது. பொதுமக்களும் நன்கொடையாகக் கொடுத்தார்கள். ஆனால், அந்தக் கணக்கு இன்னும் ஆணையருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து கொண்டே இருக்கிறது. அதற்குப் பிறகு வடக்கு கோபுரம் கட்டுவதற்கு ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் செலவில் அனுமதி தரப்பட்டிருக்கிறது. அதைக் கட்டி முடித்த பிறகு, கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்களைப்பற்றி யோசிக்கலாம்.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து கேள்விகள் எழுப்ப வாய்ப்பில்லை. இது விவாதம் அல்ல.

விவசாயிகளுக்கு நிவாரண நிதி.

133—*வினா எண். 801)—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்,—
திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சி, வெள்ளம், புயல் போன்றவைகளினால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும்போது அந்த இழப்பை ஈடு செய்வதற்கு விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இயற்கை சீற்றங்களினால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு, கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்கள் வசூல் செய்ய இயலாமல் போனால், அக்கடன் நிலுவைகளை தள்ளுபடி செய்து நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் நிவாரண நிதி ஒன்றினை அரசு 31–10–1964 முதல் நிர்வகித்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நாம் ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். ஆனால், புயல், வெள்ளம் போன்ற இம்மாதிரியான இயற்கை சீற்றங்கள் காரணமாகப் பாதிக்கப்படுகிறபோது—அதாவது புயல் வந்தால் ஏழை எளிய விவசாயிகளின் கூறை பிய்ந்து போய்விடுகிறது—வறட்சி வந்தால் மரங்கள் எல்லாம் பட்டுப்போய் விடுகின்றன—

1989 ஏப்ரல் 26]

வெள்ளம் வந்தால் மணல் அடித்துப் போய் விவசாயிகளின் நிலங்கள் எல்லாம் மணல் மேடிட்டுப் போய்விடுகின்றன—எனவே இப்படிப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசு என்ன செய்வதாக உத்தேசித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன்பெற்றிருப்பார்களானால்— அவர்களுக்கு ஒரு இன்குரன்ஸ் திட்டம் இருந்தது. இருந்தாலும் கடன் வாங்கியவர்களின் நிலைமையை அரசாங்கம் பரிசீலித்துதான் இப்படிப்பட்ட ஓர் ஏற்பாட்டை 30—10—1964 முதல் செய்து வருகிறது. இந்த நிதியிலிருந்து ரூ. 2,72,000 இதுவரை கடன் தள்ளுபடிக்காகச் வசலவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மையார் அவர்கள் கேட்டதைப் போல இன்னும் இதை அனைத்து விவசாயிகளுக்கும் பயன்தரும் வகையில் வேளாண்மைக் கடன் நிவாரண நிதி மத்திய-மாநில அரசுகளால் நிறுவப்பட வேண்டும் என அனைத்திந்திய ஊரகக் கடன் ஆய்வுக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டு, மத்திய அரசால் இதுவரையில் இந்த நிதி நிறுவப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் இதை விரைவுபடுத்தி, இதற்கு ஏற்பாடு செய்வார்களானால் எல்லா விவசாயிகளும் பயன் பெறத்தக்க வகையில் இது அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்களிடமிருந்துஉண்மையிலேயேநான் இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை. அங்கே விவசாயம் பாதிக்கப்பட்டு மணல் அடித்துக்கிடக்கிறது. அவன் ஏழை. அவன் வாழ ஒரு வழியுமே இல்லை. இந்த நிலத்தை வைத்துத்தான் அவர்கள் விவசாயம் செய்யவேண்டும். அப்பேர்ப்பட்ட நிலைமையில்இப்போதுஅமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை எல்லாம் மாற்றி பரிசீலனை செய்து எங்கெங்கெல்லாம் ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு அரசாங்கமே அதன் டிபார்ட்மெண்ட் மூலமாக அந்த மணலை எல்லாம் புல்டோசர் வைத்து தள்ளிவிட்டு, பிறகு இந்தப் பணத்தை நீங்கள் மானியமாகக் கூட கொடுக்க வேண்டாம், ஆண்டுதோறும் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பி வசூல் செய்யக்கூடிய ஒரு நிலைமையிலாவது இந்த திட்டத்தை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே இந்த மாதிரி வெள்ளத்தாலே எங்கேயாவது நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்குமேயானால் அந்த நிலங்கள் வெள்ளத்தாலே

பாதிக்கப்பட்டது என்று அரசு முடிவு செய்யும் நேரத்தில் வேளாண்மைத் துறையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அதை சீர் செய்து கொடுக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. ஆனால் பாதுகாப்பு இருக்கின்ற ஏனைய தொழில்களுக்கு இழப்பு மானியம் வழங்கப்படுகிறது. அதுபோல் இயற்கைப் பாதுகாப்புகளால் திடீரென்று ஏற்படுகின்ற இழப்புகளுக்கு அரசு மானியம் வழங்கவேண்டும். அந்த மானிய செலவுத் தொகை என்பது விவசாயக் கல்லூரிகளிலே விவசாய செலவுக்கு எவ்வளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர்களுக்கு அந்த இழப்பு மானியம் வழங்க அரசு திட்டம் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிலையில் நான் அறிவித்த இந்தத் திட்டத்தைத் தவிர வேறு திட்டம் எதுவும் கொண்டுவர வாய்ப்பு இல்லை.

திருப்பத்தூரில் கடைகள் கட்டி வாடகைக்கு விடுதல்.

*134—(*வினா எண். 152)*— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள பாஞ்சாலை மைதானம் என்னும் இடத்தில் அரசு மூலம் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே ஏழைகளும் அன்றாடம் காய்கறிகள் விற்றுப் பிழைக்கும் ஏழை எளியவர்கள் 75 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வுகிடைக்கின்ற வகையிலே நான் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இரண்டு முறை இந்தக் கேள்வியை கேட்டேன். இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது போன்ற ஏழை எளியவர்கள், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் காலி செய்ய வேண்டுமென்று சொல்கின்றார்கள். அதற்குப் பாஞ்சால மைதானம் என்ற இடத்திலே கடைகளைக் கட்டி குறைந்த வாடகைக்கு விட்டால் அந்த